புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# ஐங்குறுநூற்றில் மகளிர் விளையாட்டுகள்

முனைவர் தா.ரா. ராமலட்சுமி
உதவிப் பேராசிரியர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

## ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கியங்களின் பொற்காலமாகத் திகழ்ந்த சங்ககாலத்தில் தோன்றிய இலக்கியங்கள் தமிழரின் வாழ்வியல் முறைகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், சடங்கு முறைகள் அனைத்தையும் வெளிப்படுத்தும் பாங்கிலேயே அமைந்திருக்கின்றன. தமிழரின் பல்வேறு வகையான வாழ்வியல் முறைகள் சாதாரண நடைமுறைகளாகத் தோன்றினாலும் அவற்றின் விளைவுகள் மறைமுகமாகப் பல்வேறு காரண காரியங்களையும் உண்மைகளையும் கொண்டதாகவும் பயனளிக்கக் கூடியதாகவும் அமைந்திருக்கின்றன. அந்த வகையில் சங்க இலக்கியங்களில் அதிக எண்ணிக்கையின பாடல்களைக் கொண்ட ஐங்குறுநூற்றில் இடம்பெறும் பல்வேறு வகையான விளையாட்டுகளில் மகளிர் விளையாடும் விளையாட்டுகளை ஈராயிரம் ஆண்டுகளைக் கடந்தும் இன்றைய நவீன உலகத்தில் வாழும் தற்கால சமுதாயத்தினர்க்கு எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

## முன்னுரை

சங்ககாலத்தில் பொழுதுபோக்காகப் பல்வேறு விளையாட்டுகளை விளையாடியுள்ளனர். விளையாட்டின் அடிப்படை நோக்கம் உடல்திறனை வளர்த்து, உள்ளத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தி, மனமகிழ்ச்சியில் திளைப்பது ஆகும். உடலிலும் உள்ளத்திலும் உள்ள ஆற்றல்திறனை வெளியிடவும் எதிர்பாராத தோல்விகளை எதிர்கொள்ளவும் மனப்பான்மை மேம்படவும் விளையாட்டு உதவுகிறது. விளையாட்டு வழியாகப் பட்டறிவும் போராட்டத்திற்கு விடைகாணும் திறனும் பெற முடிகிறது. தொல்காப்பியர்,

செல்வம் புலனே உணர்வு விளையாட்டென்று
அல்லல் நீத்த உவகை நான்கு (தொல்.பொருள். 1205)

என்ற இந்நூற்பாவின் வழியாக மனமகிழ்ச்சியை ஊட்டும் காரணங்களுள் விளையாட்டும் ஒன்று என உணர்த்துகிறார். விளையாட்டு இருவகைப்படும். அவை

1. நில விளையாட்டு
2. நீர் விளையாட்டு

நீரில் விளையாடும் நீச்சல், புனலாடுதல், வாத்துப்பிடித்தல், கல்லெடுத்தல், படகுப்போட்டி முதலியவை நீர் விளையாட்டுகளாகும்.

நில விளையாட்டுகள் எனப்படுபவை நிலத்தில் விளையாடும் சடுகுடு, ஊசல், பாவை விளையாட்டு, பந்தாடுதல், ஓடிப்பிடித்தல் முதலியவை தரையில் விளையாடும் விளையாட்டுகளாகும். இவ்விளையாட்டுகள் சிறுவர், சிறுமியர், ஆடவர், மகளிர், முதியோர் என அவரவர் வயதுக்கேற்ப ஆடி மகிழ்கின்றனர். சங்க இலக்கியங்கள் போட்டியில்லா மனமகிழ்ச்சிக்காக மட்டுமே விளையாடுபவை எனச் சில விளையாட்டுகளைக் குறிப்பிடுகின்றன. அவை ஊசல், அம்மானை, பாவை விளையாட்டு, வண்டல் இழைத்தல், கூடல்

இழைத்தல், புனலாட்டு, அலவனாட்டு, பந்தாடுதல், கழங்காடுதல், பொய்தல் ஆடுதல், குரவைக்கூத்து போன்ற விளையாட்டுகளாகும்.

பந்தாடுதல்

இளமகளிர் பொழுதுபோக்காகப் பல்வேறு விளையாட்டுகளை விளையாடுவதைப் போன்று மகளிர் பலரும் சேர்ந்து பந்து விளையாடி மகிழ்ந்திருக்கிறார்கள். இதனை,

பந்து ஆடு மகளிரின் படர்தரும் (ஐங். 295:5)

என்ற அடி குறிப்பிடுகின்றது.

பந்தாட்டம் என்பது "ஒவ்வொருவரும் தமது ஆட்டத்தில் ஆயிரம் கை, மூவாயிரம் கை, ஆறாயிரம் கை என்று கணக்கெடுப்பார்கள். யார் அதிக எண் கணக்கேற்றுகிறார்களோ அவர்களே வெற்றி பெற்றவர் ஆவர். இந்தப் பந்தாட்டத்தை அக்காலத்தில் மணம் ஆகாத பெண்மணிகள் மட்டுமே ஆடினார்கள் என்று தோன்றுகிறது" என்கிறார் மயிலை சீனி. வேங்கடசாமி (நுண்கலைகள், ப. 81). இதனை ஐங்குறுநூற்றுப் பாடலும் உறுதி செய்கிறது.

உடன்போக்குச் சென்ற தலைவி அதற்கு முன் தான் தன் தோழியரோடு விளையாடி மகிழ்ந்த விளையாட்டுப் பொருட்களான பந்து, பாவை, கழங்குகளைத் தலைவனுடன் செல்லும்போது தாய்வீட்டில் விட்டுச் சென்றுவிட்டாள் என்று குறிப்பிடுவதிலிருந்து இவ்விளையாட்டுகள் யாவும் மணமாகாத பெண்கள் விளையாடுபவை என்பது தெளிவாகின்றது. இதனை,

சென்றனள் மன்ற எம்மகளே
பந்தும் பாவையும் கழங்கும் எமக்கு ஒழித்தே (ஐங். 377:3-4)

என்ற அடிகள் இயம்புகின்றன. மேலும் திருமுறையாசிரியர்கள் சில தலத்துப் பெண்களை வருணிக்கும்போதும் உமாதேவியை வருணிக்கும்போதும் பந்து ஏந்திய கையினராக வருணித்துள்ளனர்.

பந்தார் விரல் மடவாள (திருஞான.தேவா. 1:129:2)
பந்தார் விரல் உமையாள்
வளங்கெழு திருநகரப் பந்து சிறிது எறியினும் (திருஞான.தேவா. 1:8:5)

என்பன போன்ற பாடலடிகள் மூலம் பெண்கள் அக்காலத்தில் பந்து விளையாடினர் என்பது புலனாகிறது.

பாவை விளையாட்டு

மகளிர் விளையாடும் விளையாட்டுகளில் பாவை விளையாட்டும் ஒன்றாகும். பாவை என்பது பெண்ணைக் குறிக்கும். பெண்ணைப் போன்ற உருவத்தை மண்ணிலோ, கோரைப் புல்லிலோ செய்து விளையாடுவது பாவை விளையாட்டாகும். இப் பாவையை இளம்பெண்கள் தங்கள் குழந்தையாக எண்ணி அதனைக் குளிப்பாட்டிப் பாலூட்டி, தன்னைப் போலவே ஒப்பனை செய்து மலர்சூட்டி விளையாடி மகிழ்வர். தாதுசெய் பாவை, வண்டற் பாவை, பைஞ்சாய்ப்பாவை, மணலில் எழுதிய பாவை, மரப்பாவை எனப் பல்வேறு விளையாட்டுப் பாவைகளும் இருந்துள்ளன.

பைஞ்சாய்க்கோரை என்னும் ஒருவகைக் கோரையால் பாவை செய்வது அக்காலப் பெண்கள் வழக்கம். அப்பாவைக்குத் தன் குழந்தையாகப் பாலூட்டி விளையாடினர் என்பதை,

பைஞ்சாய்ப் பாவை ஈன்றனென் யானே (ஐங். 153:5)

என்ற அடி குறிப்பிடுகின்றது. இப்பாவையை வைத்து விளையாடுபவர்கள் பேதைப் பருவத்துப் பெண்களே. அப்பாவை பால் உண்ணாது என்பதைக் கூட அறியாது அப்பாவையைத் தன் பால் ஊறாத இளம்மார்பில் வைத்துப் பாலூட்டி விளையாடுகிறாள் ஒரு பெண் என்பதை,

உறாஅ வறுமுலை மடாஅ
உண்ணாப் பாவையை ஊட்டுவோளே (ஐங். 128:2-3)

என்ற அடிகள் சுட்டுகின்றன. இப்பாவைக்குக் குளிப்பாட்டியும் பாலூட்டியும் விளையாடும் சிறுமிகள் அப்பாவைக்கு நறுமணம் வீசக்கூடிய பல்வேறு மலர்களையும் கொண்டு மாலை புனைந்து, அணிவித்து விளையாடுவர். இளவேனிற் காலத்து மலரக்கூடிய நறுமணம் வீசும் குரவம் பூவைப் போன்ற பாவைக்கு மாலை அணிவித்து மகிழ்ந்தனர் என்பதை,

நறும் பூங்குரவம் பயந்த
செய்யாப் பாவை கொய்யும் பொழுதே (ஐங். 344:2-3)

என்னும் அடிகள் விளக்குகின்றன.

நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையார்;
உடலகம் கொள்வார் இன்மையின்
தொடலைக்கு உற்ற சில பூவினரே (ஐங். 187:3-5)

என்பதால் கடல் விளையாட்டில் பாவை செய்து விளையாடும் மகளிர் அப்பாவைக்கு மலர்மாலை அணிவித்து விளையாடுவர். தம் விளையாட்டுப் பாவைக்குக்கூட பூக்களைக் கொண்டு மட்டுமே மாலை தொடுப்பர். சில பூக்களைக் கொண்டு தொடுத்த மாலையை விளையாட்டுப் பாவைக்குகூட அணியமாட்டார் என்பதிலிருந்து பாவைக்கும் மலர்மாலை அணிவித்து விளையாடும் பழக்கமிருந்தது தெரிகிறது. மேலும்,

பைஞ்சாய்ப் பாவைக்கும் தனக்கும்
அம்சாய் கூந்தல் ஆய்வது கண்டே (ஐங். 383:5-6)

என்ற பாடலடிகளிலும் வலம்சுரிந்த வெண்மையான மலர்களைக் கொய்து, தலைவி தனக்கும் பைஞ்சாய்க் கோரையால் செய்த பாவைக்கும் சூட்டுவதற்கு எனத் தனித்தனியாக மலர்களை ஆய்ந்தாள் என்பது தெளிவாகிறது.

வண்டற்பாவை

கடற்கரையில் இருக்கும் வண்டல் மண்ணால் பாவை செய்து அதற்கு மலர் புனைந்து விளையாடுவது வண்டற்பாவை எனப்படும். மணல் வீடு கட்டி கடற்கரையில் விளையாடுவது போன்ற விளையாட்டு இது. இவ்வாறு பாவையை இயற்றும்போது கடலலைகள் வந்து அழித்துவிடாதவாறு தக்க இடம்பார்த்து வண்டற் பாவையை அமைக்க வேண்டும். அவ்வாறு இயற்ற வேண்டும் என்பதைக் கூட அறியாத இளம்பெண் ஒருத்தி தான் விளையாடுவதற்காகக் கடலலைகள் வந்து மோதும் இடத்தில் பாவை புனைந்து நிற்கிறாள். அதனை ஓங்கி உயர்ந்து வரும் கடலலைகள் வந்து அழித்துவிட்டமையால் தன் அழகிய மைபூசப்பட்ட கண்கள் சிவக்குமாறு அழுது நின்றாள் அப்பேதைப் பெண் என்பதை,

வண்டற் பாவை வௌவலின்
நுண் பொடி அளைஇக் கடல் தூர்ப்போளே (ஐங்.124:2-3)

தெண்திரை பாவை வௌவ
உண்கண் சிவப்ப அழுதுநின்றோளே (ஐங்.125:2-3)

என்ற அடிகள் பகர்கின்றன. இவ்வாறு பேதைப்பருவத்துப் பெண்கள் வண்டல் மண்ணால் பாவை செய்து விளையாடி மகிழ்ந்தனர். இவ்வாறு சங்ககாலப் பெண்கள் பாவை, பசுங்கிளி, பூவை போன்ற பல்வேறு விளையாட்டுப் பொருட்களை வைத்து விளையாடி மகிழ்ந்ததை,

இது என் பாவைக்கு இனிய நன்பாவை
இது என் பைங்கிளி எடுத்த பைங்கிளி
இது என் பூவைக்கு இனிய சொல்பூவை (ஐங்.375:1-3)

என்னும் அடிகள் கூறுகின்றன.

கழங்காடுதல்

கழங்காடுதல் என்பது சிறுமியர் விளையாடும் விளையாட்டுகளில் ஒன்று.'கழங்கு' என்ற சொல்லுக்கு மூவகைப் பொருள்நிலைகள் உண்டு.

1. மக்கள் எண்ணப் பயன்படும் கருவி (கழஞ்சு)
2. மகளிர் விளையாடப் பயன்படும் கருவி
3. வேலன் குறிகூறப் பயன்படும் கருவி

அக்காலத்தில் கழங்குக் காய்களை இம்மூவகை நோக்கங்களுக்காகப் பயன்படுத்தினர். இக்காய், கழல், கழங்கு, கழற்சிக்காய் என்றும் கூறப்படும். அக்காய்கள் உருண்டை வடிவில் சிறு பந்துகள் போன்றிருக்கும். அவற்றைக் கைகளில் ஒன்றும் பலவும் எடுத்து ஒன்றை மேலே தூக்கிப் போட்டுப் பிறவற்றை அடுத்தடுத்துப் போட்டு ஒன்றைக்கூட கீழே விடாமல் பிடித்து விளையாடுவது கழங்காடலாகும்.

தலைவனுடன் உடன்போக்கு சென்ற தலைவி அதுவரை தான் வைத்து விளையாடி வந்த பந்து, பாவை, கழங்கு போன்ற விளையாட்டுப் பொருட்களை விட்டுவிட்டுச் சென்றுவிட்டாள் என நினைத்து, தாய் வருந்தினாள் என்பதை,

சென்றனள் மன்ற, என் மகளே
பந்தும் பாவையும் கழங்கும் எமக்கு ஒழித்தே (ஐங். 377:3-4)

என்ற அடிகள் உரைக்கின்றன. அகநானூற்றிலும் தலைவி தன்னுடைய இளம்துணை ஆயமொடு கழங்காடி மகிழ்ந்தாள் என்பதை,

இளந்துணை ஆயமொடு கழங்கு உடனாடியும் (அகம். 17:2)

என்ற அடி குறிப்பிடுகிறது.

பொய்தல் விளையாட்டு

பொய்தல் விளையாட்டு என்பது காமக்குறிப்பில்லாத பேதைப் பருவத்து மகளிர் பலர் சேர்ந்து சிற்றில் கட்டிச் சோறாக்கி, இவள் கணவன் இவள் மனைவி என்று தம்முள் கூறி விளையாடும் விளையாட்டு. இவ்விளையாட்டில் ஆடவராகிய இளஞ்சிறாரும் சேர்ந்து ஆடுதலும் உண்டு. ஆடவரோடு கூடாது மகளிரே அவர்க்கு மாறாக மற்றோரிடத்தில் நின்று ஆடிமகிழும் விளையாட்டு இதுவாகும். ஐங்குறுநூற்றிலும் சிறு பெண்கள் பொய்தல் ஆடி மகிழ்ந்ததை,

பொய்தல் ஆடிய பொய்யா மகளிர் (ஐங். 181:2)

என்ற அடி விளக்குகிறது. இவ்வாறு பொய்தலாடிய மகளிர் மறையெனல் அறியாத மாயமில்லாப் பருவத்தினரே ஆவர். ஆதலின் பொய்தலாடிய மகளிர் பொய்யா மகளிர் எனப்பட்டனர். தாம் கண்டதைக் கேட்டதைச் சிறிதும் மறையாது வெளிப்படக் கூறுவர். பரிபாடலிலும்,

பொய்தல் மகளிர் கண்காண இகுந்தந்து (பரி. 20:59)

என்பதால் பொய்யா மகளிர் ஆடிய பொய்தல் விளையாட்டு வெளிப்படுகின்றது.

குரவைக்கூத்து

குரவைக்கூத்து என்பது பண்டைக்காலத்துக் கூத்து வகைகளுள் ஒன்றாகும். இது வரிக்கூத்தின் ஒர் உறுப்பாகும். விநோதக் கூத்துகள் ஆறனுள் இஃது ஒன்றாகும். இக்கூத்தில் மகளிர் எழுவரோ, எண்மரோ, ஒன்பதின்மரோ பங்குபெறுவர். சமநிலையில் மண்டிலமாக நின்று கைகோத்து நின்று ஆடுவர். தாம் விரும்பிய ஒருவரின் புகழ் குறித்துப் பாடிக்கொண்டு ஆடுவர். சிலப்பதிகாரத்திலும் ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை என இரண்டு காதைகள் இடம்பெற்றுள்ளன. திவாகர நிகண்டு,

குரவைக் கூத்தே கை கோர்த்தாடல் (திவாகர நிகண்டு, 1963)

என்று கைகோர்த்து ஆடும் விளையாட்டு குரவைக்கூத்து எனக் குறிப்பிடுகிறது. "காதலையோ போர் வெற்றியையோ பொருளாகக் கொண்டு குரவைச் செய்யுட்களைப் பாடிக்கொண்டு எழுவரோ அல்லது ஒன்பதின்மரோ வட்டமாக நின்று, கைகோர்த்துக் கொண்டு ஆடுவது குரவைக் கூத்தாகும்" என்று கலைக்களஞ்சியம் (தொகுதி-4, ப. 61) குறிப்பிடுகின்றது. இக்குரவையாட்டம் மூன்று நிலைகளில் நடைபெற்றதை,

"1. சினமிக்க வீரர் ஆடும் குரவையாட்டம்
2. எந்த நோக்கமும் இன்றிக் குரவையாடி மகிழ்வது
3. முருகவேளுக்காகக் குரவையாடுவது"

*என்று சிலம்பு நா. செல்வராசு சுட்டிக்காட்டியுள்ளார் (தொல்தமிழர் சமயம், ப. 6). இவ்வாறு பொய்தல் என்னும் காமக்குறிப்பில்லாத விளையாட்டை விளையாடி சோர்வுற்ற மகளிர் குரவையும் ஆடுவர். கடற்கரையில் குவிந்துள்ள வெண்மணலில் குரவைக்கூத்தும் நிகழ்த்தி மகிழ்வர். இதனை,*

*பொய்தல் ஆடிய பொய்யா மகளிர்*
*குப்பை வெண்மணல் குரவை நிறூஉம்* (ஐங். 181:2-3)

*என்ற அடிகள் மூலம் குறிப்பிடப்படுகிறது.*

*முடிவுரை*

- *சங்ககால விளையாட்டுக்கள் உடல் திறனையும் மனத்திறனையும் வெளிப்படுத்தும் நோக்கில் இருந்தன.*
- *ஐங்குறுநூற்றில் மகளிர் விளையாட்டுகளாக பந்தாடுதல், கழங்காடுதல், பொய்தல் ஆடுதல், குரவைக்கூத்து போன்ற விளையாட்டுகள் விளையாடப்பட்டுள்ளன.*
- *மகளிர் ஆடிய விளையாட்டுகள் பெரும்பாலும் குழு விளையாட்டுகளாகவே அமைந்திருந்தன. இக்குழு விளையாட்டுகள் ஒற்றுமையையும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் வளர்க்கின்றன.*
- *தற்காலத்தில் இணைய வழியாக அமர்ந்த இடத்திலேயே விளையாடும் விளையாட்டுக்கள் உடல் சோர்வை மனச் சோர்வையும் ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளன.*

*துணைநூற்பட்டியல்*


*1. சோமசுந்தரனார் பொ.வே.(உரை). 1961. ஐங்குறுநூறு, சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.*

*2. செல்வராசு நா. 2001. தொல்தமிழர் சமயம் மானுடவியல் சமூகவியல் ஆய்வுகள், சென்னை: காவ்யா பதிப்பகம்.*

*3.சோமசுந்தரனார் பொ.வே.(உ.ஆ.),1969. பரிபாடல், திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.*

*4.சோமசுந்தரனார் பொ.வே.(உ.ஆ.), 1970. அகநானூறு, திருநெல்வேலி: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.*

*5. கணேசய்யர். 2007. தொல்காப்பியம் - நச்சினார்க்கினியர் உரை, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*

*6. நடராசன் பி.ரா. திருஞானசம்பந்தர் தேவாரம்- முதல் பகுதி, சென்னை: உமா பதிப்பகம்.*

*7. வேங்கடசாமி . சீனி 1972.நுண்கலைகள், மணிவாசகர் நூலகம், சென்னை.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********